12th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : தோட்டப்பயிரில் ஒரு வகைக்குத்தான் 25 பர்செண்டு. இன்னொன்றுக்கு 75 பர்செண்ட் என்று சொன்னேன். அது 50 பர்செண்ட்டுக்கு மேலாகிறது.

Religious institutions in Kanyakumari district.

* 96 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the religious institutions in Kanyakumari district and Shencottah taluk have so far been helped from the State Funds; and

(*b*) if so, the institutions that are receiving the help and the extent to which such help is given?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A sum of Rs. 5,62,500 has been sanctioned by the Government for the maintenance of the temples in the transferred area for the period from 1st November 1956 to 31st March 1957.

All the incorporated devaswoms in the transferred area will be receiving their share from the grant.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே குறிப்பாக, சுசீந்திரம், கன்னியாகுமரி கோவில்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இப்போது இல்லை. ஆங்காங்கு இதுவரையிலே எப்படி ஒதுக்கப் பட்டிருக்கிறதோ அப்படியே இப்போதும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்தக் கோவில்களின் நிர்வாகம் முன்னால் ஒரு தேவஸ்வம் போர்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபையால் நடத்தப்பட்டது. இப்பொழுது எவ்வாறு நடைபெறுகிறது. இனிமேலாவது ஒரு போர்ட் ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அவைகளை " என்டோமென்ட் கமிஷனரே " நேரடியாக கவனித்து வருகிறார். அங்குள்ள சட்டத்தை எப்படி " அடாப்ட் " செய்வது என்பது பற்றி முடிவு செய்யப் பட வேண்டியிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether the Madras Government are receiving any grant from the Kerala State for this purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there is no question of receiving any grant from the Kerala State. On the re-organization of the States, under Article 290-A of the Constitution as amended by the Seventh Amendment Act, 1956, a sum of Rupees 13,50,000 is charged on and should be paid out of the Consolidated Fund of this State every year to the Devaswom Fund established in this State for the maintenance of these Hindu temples and shrines.

SRI T. T. DANIEL : May I know whether the Hon. Minister is aware of a provision in the States Reorganization Act according

to which a separate Board has to be constituted for managing these temples? If so, may I know why there is so much delay in constituting such a Board?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The constitution of a separate Board would depend upon how we adapt the existing law.

SRI M. JAGANNATHAN : Sir, the Hon. Minister stated that some temples in the transferred area are receiving financial help from the State. May I know how many of them are listed temples and how many of them are non-listed temples?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of listed and non-listed temples. There is no such category under the existing law, in the Kanyakumari district.

SRI A. GOVINDASAMY : கோவில்களுக்கு தனி சொத்து கிடையாதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனி சொத்து சில கோவில்களுக்கு இருக்கலாம்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டு தர்ம ஸ்தாபனங்களின் நிலைமைக்கு மாறாக கன்னியாகுமரியில் தர்ம ஸ்தாபனங்களின் பெயரால் உள்ள கோவில்கள் முதலியவற்றிற்கு நமது அரசாங்கம் தனது வருமானத்திலிருந்து பணத்தைத் தரவேண்டிய நிலை இருக்குமானால் அவற்றில் சிலவற்றையேனும் மூடிவிட அரசாங்கம் உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யத்திலும், எற்கெனவே இருந்த ராஜ்யத்திலும் '' தஸ்டிக் அலவன்ஸ் '' கொடுக்கப்பட்டு வருகிறது. இதை இனாமாகக் கொடுப்பதில்லை. முன்பு அதற்கிருந்த நிலத்தை எடுத்துக்கொண்டுதான் அதற்குப் பதிலாக நஷ்ட ஈடாக இது கொடுக்கப் பட்டு வருகிறது. அதே மாதிரிதான் இந்த கன்னியாகுமரி கோவில்களைப் பொறுத்த மட்டிலும், பதிமூன்றரை லட்சம் ரூபாய் கொடுக்க சட்டம் இயற்றப் பட்டு இருக்கிறது. இதற்கு முன்னால் அவைகளுக்கு இருந்த நிலத்தை எடுத்துக்கொண்டு அதற்கு நஷ்ட ஈடாகத்தான் இந்தப் பணம் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI A. CHIDAMBARANATHA NADAR : தலைவர் அவர்களே, ஸர் தாமஸ் மன்ரோ திருவிதாங்கூர் ராஜ்யத்தில் திவானாக இருந்த காலத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான சொத்துக்களை எடுத்து அதன் வகையாகத்தான் இன்று தேவஸ்வத்திற்கு கொடுக்கிறார்கள் என்பதை மந்திரியவர்கள் அறிவார்களா என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதைத்தான் சற்று முன்பு நான் குறிப்பிட்டேன்.

SRI T. T. DANIEL : Is it not a fact that properties worth several lakhs of rupees belonging to these temples could not be extinguished because of some order passed by the erstwhile Travancore-Cochin State and the amount of Rs. $13\frac{1}{2}$ lakhs referred to by the Hon. Minister had been decided as a sort of compensation for the properties that have been taken over by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைத்தான் சற்று முன்பு தமிழில் சொன்னேன்.

MR. SPEAKER : Questions are over.